காரணத்தால் தண்ணீர் கொடுக்கப்படவில்லை என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், உடனடியாக குடிநீர் இல்லாத பகுதிகளுக்கு, வாணியம்பாடியிலிருந்து வருகிற மின்சாரத்தை வழங்கி இதற்கு முன்னுரிமை கொடுத்து, திருப்பத்தூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை ஏப்ரல் 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை இருந்து வந்தது. இப்போது அங்கே நாள் ஒன்றுக்கு 45 லட்சம் லிட்டர் நீர் இறைக்கப் பட்டு, திருப்பத்தூர் நகரத்திற்கு 25 லட்சம் லிட்டர் நீரும் மற்ற இடங்களுக்கு 20 லட்சம் லிட்டர் நீரும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற இடங்களில், அந்த நகராட்சிகள் விரும்பும் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையினுடைய அனுமதியோடு மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நாட்களில் ஜெனரேட்டர் வைத்துக்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படுகிறது. ஆகவே மின்சார நிலை இப்போது ஓரளவிற்கு சீர்படுத்தப்பட்டு வருகிற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குடிதண்ணீர் வழங்கப்படுவதாகச் சொன்னாலும், குறிப்பாக பக்கிரி தக்கா போன்ற இடங்களில் முஸ்லீம்கள் வாழ்கின்ற பகுதிகளில் தண்ணீர் கொடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளது. எனவே திருப்பத்தூர் நகரத்தில் இதுபோன்ற பல இடங்களில் தண்ணீர் வருவதில்லை. உடனடியாக ஜென ரேட்டர் வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுபற்றி அந்த நகராட்சி அனுப்பி யிருக்கும் என்று சொன்னால், அந்தத்துறை அதற்கான அனு மதியை வழங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

6. அறிக்கை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் சார்பில் திரு எம். அப்துல் லத்தீப் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பார்.